யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவம் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **பகுதி I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி I

01) (i) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்து மறை உண்மைகள் 4 தருக.

(ii) இறைவன் மோசேயை தைரியப்படுத்திய நான்கு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(iii) கர்த்தர் கற்பித்த செபத்திற்கும், இயேசுவின் இறை வேண்டுதலுக்குமுள்ள ஒற்றுமையான, சமமான பண்புகள் நான்கு குறிப்பிடுக.

(iv) திருமணவிருந்து உவமையில் குறிப்பிடப்படும் நான்கு உவமான - உவமேயங்களைத் தருக.

(v) இறுதி இரணவுணவின் போது இயேசு சீடர்களின் காலடிகளைக் கழுவியதன் மூலம் எடுத்துக் கூறும் ஆழமான கருத்துக்கள் நான்கு தருக.

(4 x 5 = 20 புள்ளிகள்)

02) (i) இறைவாக்கினர் எசாயா குறிப்பிடும் மெசியாவின் அடையாளங்கள் நான்கு தருக.

(ii) கானாவூர் திருமண விழாவில் நடைபெற்ற புதுமை மூலம் வெளிப்படுத்தப்படும் இறைச் செய்தி நான்கு தருக.

(iii) படைவீரர் இயேசுவை ஏளனம் செய்த நான்கு சந்தர்ப்பங்களைத் தருக.

(iv) உடலின் உயிர்ப்புப் பற்றிய புனித பவுலின் படைப்பினையில் இறக்கும் போதுள்ள உடலுக்கும் உயிர்த்தெழும் போதுள்ள உடலுக்குமான வேறுபாடுகள் 4 தருக.

(v) பெந்தக்கோஸ்து தினத்தன்று நடைபெற்ற நிகழ்வுகள் உலகெங்கும் எவ்வாறு பரவியது என்பதற்கு நான்கு எடுத்துக் காட்டுக்கள் தருக.

(4 x 5 = 20 புள்ளிகள்)

03) (i) திருச்சபையில் கூட்டப்பட்ட நான்கு முக்கியமான பொதுச் சங்கங்களைத் தருக.

(ii) இறையாட்சி பற்றி விபரிக்கும் புதுமைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) ஜெருசலேம் சங்கத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(iv) கிறிஸ்தவம் யூதப் பின்னணியில் பிறந்தது என்பதற்கு நான்கு எடுத்துக் காட்டுக்கள் தருக.

(v) இறைவாக்கினரின் அழைப்பில் காணப்பட்ட எப்பண்புகள் மோசேயின் அழைப்பிலும் காணப்பட்டன. அவற்றில் நான்கினைக் குறிப்பிடுக.

(4 x 5 = 20 புள்ளிகள்)

## பகுதி II

04) (i) இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத் தனத்திலிருந்து மீட்க இறைவன் இயற்கையைப் பயன்படுத்திய முறையினை விபரிக்குக.

(ii) உமது வாழ்வில் இயற்கை மூலம் நீர் பெற்றுக் கொண்ட இறை பராமரிப்பு ஒன்றினை 150 சொற்களுக்குக் குறையாது விபரிக்குக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

05) (i) நீதியுள்ள அரசரின் காலம் பற்றி எசாயா இறைவாக்கினர் 11 : 1 - 9 இல் எடுத்துக் கூறும் கருத்துக்களை விளக்குக.

(ii) புனித பவுலின் முதலாம் மறைதூதுப் பயணத்தின் போது பிலிப்பியில் நடைபெற்ற சம்பவங்களை தெளிவுபடுத்துக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

06) (i) லூக்கா நற்செய்தி புற இனத்தவர்களில் நற்செய்தி என்பதற்கு நீர் கூறும் ஆதாரங்களை தெளிவுபடுத்தி விளக்குக.

(ii) கிறிஸ்த்து இவ் உலகிற்கு ஏன் மனித அவதாரம் எடுத்து வந்தார் என்பதனை உம் வகுப்பு வேற்று மத மாணவன் ஒருவனுக்கு எவ்வாறு எடுத்துக் கூறுவீர்?

(2 x 10 = 20 புள்ளிகள்)

07) (i) கிறிஸ்த்துவின் இரண்டாம் வருகை பற்றி புனித பவுல் (1 தெ 5 : 1 - 11) இல் கூறும் கருத்துக்களை விளக்குக.

(ii) வாய்மொழிப் பாரம்பரியங்களாக இருந்த நற்செய்தி எழுத்து வடிவம் பெற வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது?

(2 x 10 = 20 புள்ளிகள்)

08) (i) இஸ்ராயேல் மக்களின் ''கடத்தல் விழா'' வின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(ii) நிசேயா பொதுச் சங்கம் கூட்ட ஏதுவான காரணங்களை விளக்குக.

(2 x 10 = 20 புள்ளிகள்)